செ.வெ. எண்: 712 நாள்: 02.12.2011

# செய்தி வெளியீடு

வாழ்வில் சுவையும், சுறுசுறுப்பும் நல்குவதில் சுற்றுலா முதன்மையிடம் வகிக்கிறது. சுற்றுலாவின் மூலம், இயற்கை அழகு மிளிரும் இடங்களையும், வரலாற்று புகழ்மிக்க இடங்களையும், பாரம்பரியமிக்க திருத்தலங்களையும் பொதுமக்கள் கண்டு களிக்கின்றனர். அறிவுப்புரட்சிக்கும், சிந்தனைக் கிளர்ச்சிக்கும் சுற்றுலா வழி வகுக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள பாரம்பரியமிக்க திருத்தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள 108 திவ்ய தேசங்களில், முதன்மை திருத்தலமான அரங்கநாதர் திருக்கோவிலுக்கு நாள்தோறும் வருகை தரும் பக்தர்கள் ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள அம்மா மண்டபத்தின் அருகில் காவேரி ஆற்றில் குளித்து விட்டு, வெயில் மற்றும் மழைக்காலங்களில் அரங்கநாதரை தரிசிக்க, சிரமமின்றி செல்ல வசதியாக, ஒரு கோடி ரூபாய் மதிப்பில் அம்மா மண்டபத்திலிருந்து அரங்கநாதர் கோவில் வரை சாலை ஓரத்தில் மேற்கூரை அமைக்கப்படும்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற திருக்கோயிலான அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களின் வசதிக்காக 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓய்வறை, பொருட்கள் வைப்பறை, குளியலறை மற்றும் கழிப்பறை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

முத்துப்பேட்டை ஜாம்புவானோடை தர்காவுக்கு வருகைத் தரும் பயணிகளின் வசதிக்காக, தர்கா அருகில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாகன நிறுத்துமிடம் மற்றும் கழிப்பறைகள் அமைத்துத் தரப்படும்.

சிவகங்கை மாவட்டம், திருக்கோஷ்டியூரில் உள்ள புகழ்பெற்ற திருத்தலமான ஸ்ரீசௌமிய நாராயண பெருமாள் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓய்வு மண்டபம், குளியலறை மற்றும் கழிப்பறை ஆகியவை கட்டித் தரப்படும்.

விருதுநகர் மாவட்டம், பகவான் ரமண மகரிஷி அவதரித்த புண்ணியத் தலமான, திருச்சுழியில் உள்ள பகவான் ரமண மகரிஷி இல்லத்தை பார்வையிட நாள் தோறும் வருகைப் புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பில் ஓய்வு அறை, குளியலறை, குடிநீர் வசதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதேபோன்று, இம்மாவட்டத்தில், இருக்கன்குடியிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் திருத்தங்கலில் உள்ள அருள்மிகு நின்ற நாராயணப் பெருமாள் திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்களின் வசதிக்காக ரூ 40 லட்சம் செலவில் பக்தர்கள் தங்கும் ஓய்வு மண்டபம், கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அருகில், ஸ்ரீவாஞ்சியத்தில் உள்ள பழமை வாய்ந்த, பிரசித்த பெற்ற சிவன் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளை அளிக்கும் பொருட்டு, 43 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஓய்வு அறை, பொருட்கள் வைப்பறை, கழிப்பறை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், ஆயக்குடியிலுள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்குள் நாள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, இங்கு வரும் பக்தர்களின் வசதிக்காக, 25 லட்சம் ரூபாய் செலவில் பக்தர்கள் தங்கும் விடுதி ஒன்று கட்டப்படும்.

அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சியில் உள்ள மிகவும் பழமை வாய்ந்ததும் வீரமா முனிவர் ஆன்மிகப் பணியாற்றிய திருத்தலமான அடைக்கல மாதா திருத்தலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்காக 44 லட்சம் ரூபாய் செலவில் ஓய்வு அறை கட்டுதல், குடிநீர் வசதி, குளியலறை, கான்கீரிட் சாலை மற்றும் மாதா குளத்திற்கு தடுப்புச்சுவர் மற்றும் படிக்கட்டுகள் கட்டுதல் போன்ற வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவின் பேரில், இவ்வாறு முக்கிய திருத்தலங்களுக்கு வருகை தரும் பக்தர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அடிப்படை வசதிகளை செய்துக் கொடுப்பதினால், இத் திருத்தலங்களுக்கு அதிக அளவில் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வருவதற்கு வாய்ப்புகள் உருவாகும்.

மேலும், திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை கழிமுகத்துவாரத்திற்கு அருகில் உள்ள பறவைகள் சரணாலயத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, 34 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓய்வு அறை கட்டுதல், படகுகள் நிறுத்துமிடம் கட்டுதல், புதிய படகுகள் வாங்குதல், உயிர்காப்பு சாதனங்கள் (Life Jackets) வாங்குதல் போன்ற பணிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவுப்படி மேற்கொள்ளப்படும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.

நாள்: 2.12.2011